ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2307/36 - 2022 නොවැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.11.24

*2307/36 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ் வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்,

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட இராசையா சுவேந்திரா என்பவர் அங்கம் வகிக்கின்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக ரகுநாதன் யூலியெற் என்பவரைப் பெயர்குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்,

1A - G 38153 — 36 (2022/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான ஜேசுதாசன் ஜெனிற்றன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ரகுநாதன் யூலியெற் என்பவர் வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**ஜே. ஜெனிற்றன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
வவுனியா,
2022, நவெம்பர் 23.

EOG 11 - 0278

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ் ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்,

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், ஹங்குரன்கெத்த பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட கொரடியே கெதர ஹேமந்த பிரதீப் குசும்சிரி என்பவர் அங்கம் வகிக்கின்ற மக்கள் விடுதலை முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான ஹங்குரன்கெத்த பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக பத்தினி ஹென்னதிகே அமித் அபேரத்ன என்பவரைப் பெயர்குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான கலுகம்பிடிய அப்புஹாமிலகே லஹிரு ஷானக கலுகம்பிடிய ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு பத்தினி ஹென்னதிகே அமித் அபேரத்ன என்பவர் ஹங்குரன்கெத்த பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**கலுகம்பிடிய அப்புஹாமிலகே லஹிரு ஷானக கலுகம்பிடிய,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
ஹங்குரன்கெத்த பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
நுவரெலியா,
2022, நவெம்பர் 23.

EOG 11 - 0279

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்,*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ், மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச சபையின் 03 ஆம் இலக்க களுதாவளை வடக்கு வட்டாரத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முருகப்பன் தேவதாசன் என்பவர் அங்கம் வகிக்கின்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச சபையின் 03 ஆம் இலக்க களுதாவளை வடக்கு வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக பாஸ்கரன் மதுமிதா என்பவரைப் பெயர்குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான முகைதீன் பாவா முகம்மது சுப்யான் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு பாஸ்கரன் மதுமிதா என்பவர் மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபையின் 03 ஆம் இலக்க களுதாவளை வடக்கு வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

**முகைதீன் பாவா முகம்மது சுப்யான்,**
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*மண்முனை தெற்கு மற்றும்*
*எருவில்பற்று பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*மட்டக்களப்பு,*
*2022, நவெம்பர் 23.*

EOG *11 - 0280*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.